بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّي عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

## பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) பற்றிய நற்குறிப்பு

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 ஜூலை 2020 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ - اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு எடுத்துக் கூறப்பட்டு வந்தது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர், உஹது, அகழ், ஹுதைபிய்யா உடன்படிக்கை, கைபர் மற்றும் மக்கா வெற்றி ஆகிய அனைத்து போர்களிலும் கலந்து கொண்டிருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிக சிறந்த அம்பு எறியும் நபித்தோழர்களில் ஒருவர் ஆவார்கள்.

மேலும் அல்லாஹ்வின் வழியில் இரத்தம் சிந்திய முதல் மனிதர் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களே ஆவார்கள். மேலும் அல்லாஹ்வின் வழியில் அம்பு எய்த முதல் மனிதரும் அன்னாரே ஆவார்கள். இந்த சம்பவம் உபைதா பின் ஹாரிஸ் அவர்களுடைய தலைமையில் அனுப்பப்பட்ட படைப்பிரிவு குறித்ததாகும்.

ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ஜமாதில் ஊலா மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களின் தலைமையில் 8 முஹாஜிரீன்களைக் கொண்ட குழுவிற்கு அமீராக நியமித்து குரைஷிகளைப் பற்றிய செய்தியை சேகரித்து வருவதற்காக ஹர்ரார் என்ற இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். இதேபோன்று சஅத் அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களின் தலைமையில் அனுப்பப்பட்ட படைப்பிரிவிலும் பங்கு பெற்றிருந்தார்கள்.

ஹஸ்ரத் சஅத் அவர்களின் தைரியத்தைப் பற்றிய அறிவிப்புகள் இருக்கின்றன. அதாவது பத்ர் போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் சஅத் அவர்கள் நடந்து சென்ற பிறகும் கூட சவாரியில் சென்று போர் செய்பவரைப் போன்று வீரத்துடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். இதன் காரணமாகவே ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஃபாரிஸுல் இஸ்லாம் என்று அழைக்கப்படுகின்றார்கள். அதாவது இஸ்லாத்தின் குதிரை வீரர் என்று அழைக்கப்படுகின்றார்.

உஹது போரின்போது மக்கள் இங்கும் அங்கும் சிதறுண்டு போன சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நிலைத்து நின்ற ஒரு சில நபர்களில் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களும் ஒருவர் ஆவார்கள்.

உஹது போரின் போது ஹஸ்ரத் சஅத் அவர்களின் சகோதரர் உத்பா பின் அபீ வக்காஸ் இணை வைப்பவர்கள் தரப்பிலிருந்து போரில் கலந்து கொண்டிருந்தார். அவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் இரண்டு அருளுக்குரிய கீழ்வரிசை பற்களை ஷஹீதாக்கி இருந்தான். மேலும் அன்னாருடைய அருளுக்குரிய முகத்தையும் கடுமையாக காயப்படுத்தினான். உத்பாவின் சகோதரர் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்கள் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து போரில் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். உத்பாவின் இச்செயல் தொடர்பாக தெரிய வந்ததும், பழிவாங்க வேண்டும் என்ற துடிப்பில் இரண்டு முறை எதிரிகளின் வரிசையை கிழித்தெறிந்தவாறு அந்த அநீதியாளனைத் தேடி புறப்பட்டார்கள். மேலும் அவனை தனது கைகளால் துண்டு துண்டாக்கி தமது உள்ளத்தை குளிரச் செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஆனால் அவன் என்னைப் பார்த்ததும் நரி ஓடி ஒளிவதைப்போன்று மறைந்து விடுவான். இறுதியில் மூன்றாவது முறை எதிரி படைக்குள் நுழைய நான் எண்ணியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் மிகுந்த பரிவுடன், இறைவனின் அடியானே! உயிரை விடுவதற்கு எண்ணுகின்றாயா? என்று கேட்டார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் தடுத்ததன் காரணமாக இந்த எண்ணத்திலிருந்து நான் பின் வாங்கினேன்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தாமே ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களுக்கு அம்பை எடுத்து கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். மேலும் ஹஸ்ரத் சஅத் அவர்கள் அந்த அம்பை எதிரிகள் மீது செலுத்திக் கொண்டே

இருப்பார்கள். ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஅத் அவர்களிடம், எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பனமாகட்டுமாக. நீங்கள் தொடர்ச்சியாக அம்பு எய்து கொண்டே இருங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்கள் தமது இறுதி காலம் வரை பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த சொற்களை மிகவும் பெருமிதத்துடன் எடுத்துக் கூறி வந்தார்கள்.

உஹது போரின் சந்தர்ப்பத்தில் ஹப்பான் என்ற ஒரு கடுமையான எதிரி ஒரு அம்பை எய்தான். அது காயமுற்றவர்களுக்கு தண்ணீர் வழங்கிக் கொண்டிருந்த உம்மே அய்மன் அவர்களின் ஆடையின் மீது பட்டது. ஹன்னான் அதைக் கண்டு சிரித்தான். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹப்பான் மீது அம்மை எய்துவதற்காக சஅத் அவர்களிடம் ஒரு அம்பை கொடுத்தார்கள். சஅத் அவர்கள் ஹப்பானின் மீது அம்பு எய்தினார்கள். அது அவன் தொண்டையில் பட்டது. அவன் பின்நோக்கி விழுந்தான். அவனது நிர்வாணம் வெளிப்பட்டது. இதைக் கண்டு நபி (ஸல்) அவர்கள் புன்னகைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட இந்த மகிழ்ச்சியானது அல்லாஹ்வின் இந்த பேருபகாரத்தினால் ஏற்பட்டதாகும். அதாவது அவன் ஒரு கொடிய எதிரியை கூர் உடைந்த அம்மைக் கொண்டு வழிப்பாதையிலிருந்து அகற்றி விட்டான்.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது. அதாவது உஹது போர் நாளன்று ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஓராயிரம் அம்மை எய்தார்கள். ஹுதைபிய்யா உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தில் எந்தெந்த சஹாபாக்கள் சாட்சியாக கையொப்பமிட்டார்களோ அவர்களில் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களும் அடங்குவார்கள். மக்கா வெற்றியின்போது ஹஸ்ரத் சஅத் அவர்களிடம் முஹாஜிரீன்களின் மூன்று கொடிகளில் ஒரு கொடி இருந்தது.

ஹஜ்ஜத்து விதா சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் சஅத் அவர்கள் நோயுற்றார்கள். இதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் சஅத் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் மக்காவில் நோயுற்றேன். மரண தருவாயை அடைந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் நலம் விசாரிப்பதற்காக என்னிடம் வந்தார்கள். நான் அன்னாரிடம், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! என்னிடம் அதிக செல்வங்கள் இருக்கின்றன. எனது சந்ததிகளில் எனக்கு ஒரு மகள் மட்டும்தான் இருக்கின்றாள். எனவே நான் மூன்றில் இரண்டு பங்கை சதகாவாக கொடுத்து விடவா என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், வேண்டாம் என்று கூறினார்கள். அதற்கு நான் பாதி செல்வத்தை சதகாவாக கொடுத்து விடவா? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், வேண்டாம் என்று கூறினார்கள். பிறகு நான் மூன்றில் ஒரு பங்கை சதகாவாக கொடுத்து விடவா? என்று கேட்டேன். அதற்கு அன்னார், சரி! ஆனால் இதுவும் மிகவும் அதிகமாகும் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எவ்வாறிருப்பினும் மார்க்க சட்ட வல்லுனர்கள், மூன்றில் ஒரு பங்கை விட அதிகமாக வஸிய்யத் செய்ய முடியாது என்பதற்கு சான்றாக இதனை காட்டுகின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்: நபிமொழிகளும் இக்கருத்தை வழிமொழிகின்றது. அதாவது தமது தேவைகளுக்காக எடுத்துக் கொண்ட பிறகு எஞ்சிய செல்வத்தை பங்கிட்டு கொடுப்பது இஸ்லாமிய போதனை அல்ல.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் சிலர் உங்களது அனைத்து செல்வங்களையும் சதகாவாக கொடுக்க எடுத்துக் கொண்டு வருகின்றீர்கள். பிறகு மக்களுக்கு முன்னால் கைகளை நீட்டுகின்றீர்கள். சதகா என்பது வெறும் அதிகப்படியான செல்வத்திலிருந்து வழங்கப்படுவதே ஆகும்.

மேலும் அன்னார் கூறினார்கள்: நீங்கள் உங்களது சந்ததிகளை ஏழைகளாகவும், மக்களுக்கு முன்னால் கையேந்துபவர்களாவும் விட்டுச் செல்வதை விட அவர்களுக்கு செல்வத்தை விட்டுச் செல்வது மிகவும் சிறந்ததாகும்.

ஆக எந்த செல்வம் தேவைகளை விட அதிகமாக எஞ்சியுள்ளதோ அதனை பங்கிட்டு கொடுக்க வேண்டும் என்று எண்ணியவாறு இதுவே இஸ்லாத்தின் கட்டளை என்று கருதுவது, இஸ்லாத்திற்கு மாற்றமானதும், சஹாபாக்களின் செயல்களுக்கு எதிரானதும் ஆகும். ஏனென்றால் சஹாபாக்களில் சிலரது மரணத்தின்போது அவர்களது சந்ததிகளில் லட்சக்கணக்கான ரூபாய் பங்கிட்டு கொடுக்கப்பட்டது.

இன்னொரு அறிவிப்பில் வந்துள்ளது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள், சஅத் அவர்களை கவனித்துக் கொள்வதற்காக மக்காவில் ஒரு நபரை இதற்காகவே நியமித்தார்கள். அந்த நபரிடம் பெருமானார் (ஸல்) அவர்கள், சஅத் அவர்கள் மரணமடைந்து விட்டால் அவரை மக்காவில் நல்லடக்கம் செய்ய வேண்டாம். மாறாக, மதீனாவிற்கு கொண்டு வந்து அங்கு நல்லடக்கம் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் அவர்களின் காலத்தில் ஹுஸ்ரு பர்வேஸின் பேரன் யஸ்தகர்தின் அரியணைக்குப் பிறகு ஈராக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக பெரிய அளவில் போருக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோது ஹஸ்ரத் உமர் அவர்கள் அவர்களை

எதிர்கொள்வதற்காக ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். மேலும் ஈரானிய அரசருடன் போர் செய்வதற்கு முன்பாக ஒரு பிரதிநிதியை அவரிடம் அனுப்பி வைத்தவாறு, அவருக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுப்பது உங்களின் கடமையாகும் என்று ஹஸ்ரத் உமர் அவர்கள் சஅத் அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்.

எனவே சஅத் அவர்களுக்கு இந்த கட்டளை கிடைத்த பிறகு ஒரு குழுவை யஸ்தகர்தை சந்திக்க அனுப்பி வைத்தார்கள். இந்த குழு ஈரானிய அரசரின் அவையை சென்றடைந்தபோது குழுவின் தலைவரான ஹஸ்ரத் நுஃமான் பின் முகரின் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையைப் பற்றி எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களுக்கு இஸ்லாத்தை பரப்புமாறும், முழு உலகிலுள்ள மக்களை உண்மையான மார்க்கத்தில் இணைவதற்கு அழைப்பு கொடுக்கும் படியும் கட்டளையிட்டுள்ளார்கள். எனவே இந்த கட்டளைக்கேற்ப நாங்கள் உங்களிடத்தில் வந்துள்ளோம். மேலும் உங்களை இஸ்லாத்தில் இணைவதற்கு அழைப்பு கொடுக்கின்றோம் என்று கூறினார்கள். இதனைக்கேட்டு யஸ்தகர்த் கடும் கோபமுற்று தமது பணியாளரிடம், மண்ணால் நிறைந்த ஒரு சாக்கு மூட்டையை எடுத்து வா என்று கூறினார். மண்ணால் நிறைந்த சாக்கு மூட்டை கொண்டு வரப்பட்டதும் இஸ்லாமிய குழுவின் தலைவரை முன்னால் அழைத்து, இந்த மண்ணால் நிறைந்த சாக்கு மூட்டையைத்தவிர வேறு எதுவும் உங்களுக்கு கிடைக்காது என்று கூறினார்.

அந்த சஹாபி முன்னேறிச் சென்று தமது தலையை குனிந்து அந்த மண்ணால் நிறைந்த சாக்கு மூட்டையை தமது முதுகில் வைத்தார். மேலும் மிக வேகமாக அந்த அரசவையை விட்டு வெளியே வந்தார். மேலும் தம்முடன் வந்தவர்களிடம் உரத்த குரலில், இன்று ஈரானின் அரசர் தனது கைகளால் தனது நாட்டின் மண்ணை நம்மிடத்தில் ஒப்படைத்து விட்டார் என்று கூறியவாறு தமது குதிரையில் சவாரி செய்தவாறு மிக வேகமாக அங்கிருந்து சென்று விட்டார்கள். அரசர் இந்த முழக்கத்தை செவியுற்றதும் சினம்கொண்டு தனது அரசவையில் இருப்பவர்களிடம், ஓடிச்சென்று மண்ணால் நிறைந்த சாக்கு மூட்டையை அவரிடமிருந்து திரும்ப பெற்று வாருங்கள் என்று கூறினார். மேலும் நானே எனது கைகளால் எனது நாட்டின் மண்ணை அவர்களிடம் ஒப்படைத்து விட்டேனே என்று கருதினார். ஆனால் அந்த சஹாபி குதிரையில் பயணம் செய்தவாறு வெகு தொலைவிற்கு சென்று விட்டார். ஆனால் இறுதியில் அவர் கூறியதே நிறைவேறியது. சில வருடத்திற்குள் முழு ஈரானும் முஸ்லிம்களின் வசம் வந்தது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இந்த வியக்கத்தக்க மாற்றம் முஸ்லிம்களிடம் எவ்வாறு ஏற்பட்டது? ஏனென்றால், திருக்குர்ஆனின் போதனைகள் அவர்களின் நல்லொழுக்கம், அவர்களின் பழக்க வழக்கத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. அவர்களது பாவத்திற்குரிய வாழ்க்கையின் மீது அது ஒரு மரணத்தை ஏற்படுத்தி விட்டது. மேலும் அவர்களை உயர்தரமான ஒழுக்கத்தில் நிலைபெறச் செய்து விட்டது. இதன் விளைவாக அவர்கள் உலகத்தில் இஸ்லாத்தை பரப்பக் கூடியவர்களாக திகழ்ந்தார்கள். மேலும் இஸ்லாத்தின் போதனைகளின்படி செயல்பட்டவாறு உண்மையான முஸ்லிம்களாக மாற்றக் கூடியவர்களாக திகழ்ந்தனர். மேலும் எவ்வித அச்சமோ, அபாயமோ மேலும் எவ்வித ஆற்றலோ அவர்களை வீழ்த்த முடியவில்லை.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எவ்வாறிருப்பினும் இவர்களைப் பற்றிய எஞ்சிய குறிப்பை இனி வரும் காலத்தில் எடுத்துக் கூறுவேன். இன்ஷா அல்லாஹ். அவர்களைப் பற்றிய குறிப்பு இன்னும் சிறிது எஞ்சியுள்ளது.

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், மதிப்பிற்குரிய முஹம்மது அக்ரம் பாஜ்வா சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய புஷ்ரா அக்ரம் சாஹிபா, இக்பால் அஹ்மது சாஹிப், மதிப்பிற்குரிய குலாம் ஃபாத்திமா ஃபஹ்மீதா சாஹிபா, மதிப்பிற்குரிய முஹம்மது அஹ்மது அன்வர் சாஹிப், மதிப்பிற்குரிய சலீம் ஹஸன் அல்ஜாபீ சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ
اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ
لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ
وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ
اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**மொழியாக்கம்: முஅல்லிம் A.கலீல் அஹ்மது**